R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2019 at Batlagundu Post office.
July 2019



WEBS மாணவர்களும் ஆசிரியர்களும் இடம் திருச்சி

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Monday 6.00 P.M on Tamilan TV
&
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 19 ஜூலை 2019 கனி 8

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

**Arjunan in Tamil:**
Every Monday 6:00 - 6:15 pm on Tamilan TV
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV



**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.

**Philemon & Kingsley in Tamil:**
Every Sunday 6:45 - 7:00 am on Tamilan TV
Every Sunday 3:30 pm on Nambikkai TV

**Rajanayagam in Tamil:**
Every Monday 7:00-7:15 am on Tamilan TV
Every Thursday 9:30-10:00 pm on Tamilan TV
Every Saturday 7:15-7:30 am on Tamilan TV



**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P.








எமது ‘ தி வேர்ட் ஆப் கிறைஸ்ட் ’ புதிய வெளியீடுகளை
பெற்றுக்கொண்ட சகோதரர்கள்

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 227

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எவனுடைய பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்?
2. தங்கத்துக்கொப்பான விலையேறப்பெற்ற சீயோன் குமாரர் எவனுடைய கைவேலையான மண்பாண்டங்களாய் எண்ணப்படுகிறார்கள்?
3. எவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை?
4. இஸ்ரவேல் வம்சத்தார் எனக்கு எதின் களிம்பாய்ப் போனார்கள் என்றார்?
5. நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல என எழுதும் அப்போஸ்தலன் யார்?
6. பூமியெங்கும் குடியிருக்கிற சகல ஜனத்தாருக்கும், ஜாதியாருக்கும், பாஷைக்காரருக்கும் சமாதானம் பெருகக்கடவது என எழுதின ராஜா யார்?
7. அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் எவ்விதமாயிருப்போம்?
8. ஜனங்களுக்கு எப்படியோ ஆசாரியனுக்கும் அப்படியே; அவர்கள் வழிகளின்படி நான் அவர்களை விசாரித்து, அவர்கள் கிரியைகளின்படி அவர்களுக்கு என்ன செய்வேன் என்று கர்த்தர் சொல்லியிருந்தார்?
9. தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாத தூதர்களை எந்நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்?
10. பலசாலிகளுக்குள்ளே தைரியவான் அந்நாளிலே எவ்விதமாய் ஓடிப்போவான் என்று கர்த்தர் சொல்லியிருந்தார்?

## வேதாகம ஆய்வு... 12
### அப்சலோம்

1. பிதா சமாதானமுள்ளவர் என்று அர்த்தம்.
2. தாவீதின் மூன்றாம் மகன் – 2சாமு.3:3
3. இஸ்ரயேல் மனுஷருடைய இருதயத்தைக் கவர்ந்துகொண்டவன் – 2சாமு.15:6
4. தன்னைத்தான் முடிசூட்டிக்கொண்டவன்.
5. இவன் இஸ்ரவேல் அனைவருக்குள்ளும் சவுந்தரியமுள்ளவன்
6. கர்த்தர் இவன்மேல் பொல்லாப்பை வரப்பண்ணினார்
7. இவன் உயிரோடிருக்கையில் தனக்கு குமாரன் இல்லையென்று சொல்லி தனக்கென்று ஒரு தூணை நிறுத்தி தன் பேரை வைத்தான் – 2சாமு.18:18



Absalom

சிறுவர் பகுதி

## சரட்டையாகிலும்...

வேதபகுதி:ஆதியாகமம்14:21-24



**ஆ**பிரகாமைப் பற்றி நாம் அநேகமுறை கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் நமது விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். நம்முடைய தேவனாகிய கர்த்தர் இந்த ஆபிரகாமை அபரிவிதமாக ஆசீர்வதித்திருந்தார். எப்படியென்றால் "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்". இந்த ஆசீர்வாதத்துக்கு ஆபிரகாம் பாத்திரவனாயிருந்தார். சரி, என்ன சரடு என்று கேட்கிறீர்களா? ஆபிரகாம் பிறனுக்குள்ள ஒரு சாதாரண சரட்டைக் கூட இச்சிக்கவில்லை.

சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத்தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப்பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும் உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார்.

பொருள்கள் என்றால் நமக்கு கொள்ளை ஆசை. இதைத்தா, அதைத்தா என்று இருக்கிற எல்லாவற்றையும் கேட்டுவாங்கிவிடுவோம். ஆனால் ஆபிரகாமோ அப்படியில்லை. கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார். ஏன் நாமும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்காது நம்முடைய தேவனுக்கு நேராக ஜெபித்து பெற்றுக்கொள்ளக்கூடாது? முடியும், இல்லையா? அப்படியானால் நாமும் விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமைப்போல பிறனுக்குள்ள ஒரு சின்ன பென்சிலைக்கூட எடுத்துக்கொள்ளாமல் தேவனிடத்தில் கேட்போம். அவர் ஆபிரகாமை ஆசீர்வதித்தது போல நம்மையும் ஆசீர்வதித்து வழிநடத்துவார்.

**மனப்பாட வசனம்:**

"வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்" (ஆதியாகமம்14:23)

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக – யாத்திராகமம் 20:17


'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள்



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 19 ஜூலை -2019 கனி - 8

ஆசிரியருரை

## உங்களில் இருக்கிறவர் பெரியவர்...
## The One Who Is In You Is Greater...




**ஒ**ருவன் தேவனுடைய மனுஷனாக இருக்கும்போது அவனில் தேவன் வாசமாயிருப்பார். "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்" என்று நாம் திருமறையில் படிக்கிறோம் (1யோவா.4:15). இயேசுவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர்கள் தோன்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் தேவன் வாசமாயிரார். இயேசுவை தம்முடைய சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு அவருடைய வசனங்களுக்கு எவர்கள் செவிகொடுக்கிறார்களோ, அவர்களுக்கு பிதாவாகிய தேவன் செவிகொடுக்கிறார். ஏனெனில் இயேசுவை பிதாவாகிய தேவன் இவ்வுலகத்தின் இரட்சகராக தெரிந்துகொண்டுள்ளார். ஆகையால் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று உரைத்திருக்கிறார். மேலும் இயேசுவானவர் சொல்லும்போது; "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" என்றார் (யோவா.14:23). உங்களோடு, தேவனும் அவருடைய குமாரனாகிய இயேசுவும் மற்றும் பரிசுத்த ஆவியானவரும் வாசம்பண்ணுகிறார்களா? அவர்கள் நம்மோடு வாசம்பண்ணினால் எத்தனை ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும்! அவர் நம்மில் வாசம்பண்ண நாம் செய்யவேண்டுவதென்ன? கிறிஸ்துவின் வசனத்தை ஏற்றுக்கொண்டு அதைக் கைக்கொள்ளும்போது; இயேசுவை அனுப்பிய தேவன் நம்மில் அன்பாயிருக்கிறார். அவர்கள் நம்மோடு வந்து வாசம்பண்ணுவார்கள்.

உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை எனக் காண்கிறோம். அநேகர் உலகத்தை நேசிக்கவும் உலகத்தாரோடு சதா உறவுகொள்ளவும் விரும்பி உல்லாசமாக இருக்கின்றனர். இந்த வாழ்வு நிலையானதா? கொஞ்சகால வாழ்க்கைக்காக இவைகளுக்கு அடிமைப்பட்டு சிற்றின்பங்களில் விழுகிறார்கள். நாளடைவில் நோய்கள் அப்படிப்பட்டவர்களை ஆட்கொள்வதால் தங்களுடைய வாழ்க்கையில் நீடித்த நாட்கள் இல்லாமல் பாதிவயதிலே பாவத்தினால் மாண்டுபோகிறார்கள். இது எத்தனை வேதனையான காரியமாக இருக்கிறது. மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு, குடி குடியைக் கெடுக்கும், குடிப்பழக்கம் உடல் நலத்திற்கு தீங்கானது என்ற வாசகங்களையெல்லாம் அரசு வெளியிட்டிருந்தும் அதைப் படித்துக்கொண்டே தங்களை கெடுத்துக்கொள்ளுகிற அநேக

மக்களை நாம் அநுதின ஜீவியத்தில் காணமுடிகிறது. இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை நமக்கு தேவையா? நம்மை உண்டாக்கிய தேவன் நம்மோடு வாழுகிறார் என்றால் அது நம்முடைய வாழ்க்கையை வளப்படுத்துமல்லவா? நம்மிலும் பெரியவர், நம்மை சிருஷ்டித்த தேவன் நம்மோடு வாழ அவருடைய வசனங்களுக்கு செவிகொடுங்கள். சிலர் தங்களோடு வாழும் தேவனை அறியாது, சிற்றின்பங்களுக்கு இடங்கொடுத்து வீழ்ந்துபோய்விடுகிறார்கள். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" என பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதின கடிதத்தில் வாசிக்கிறோம் (1கொரி.3:16). தேவனுடைய ஆலயம் எப்படியிருக்கவேண்டும்? அது தேவன் தங்குமிடமல்லவா, அதை பரிசுத்தப்படுத்தவேண்டியது நமது கடமையல்லவா, இதை அநேகர் நினைக்காமல் தங்களை கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

ஒரு புறஜாதிபெண் தேவனுடைய மகிமையைக் கேள்விப்பட்டு விசுவாசித்ததை நாம் வேதத்தில் படிக்கிறோம். இஸ்ரவேலர்கள் எரிகோ பட்டணத்தை பிடிக்கும் முன்பு அங்கே ஒரு வேசி குடியிருந்தாள் அவள் பரலோகத்தின் தேவனை விசுவாசித்தாள். அவள் இந்த தேவனைக்குறித்து கேள்விப்பட்டபோது "எங்கள் இருதயம் கரைந்துபோயிற்று, உங்களாலே எல்லாருடையதைரியமும் அற்றுப்போயிற்று, உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழேபூமியிலும் தேவனானவர்" என்று வேவுக்காரரைப்பார்த்து சொன்னாள் (யோசு.2:11). புறஜாதி மக்கள்கூட வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனுடைய மாபெரிய அற்புதங்களைக் குறித்து கேள்விப்பட்டு விசுவாசமுள்ளவர்களாக மாற்றப்படுவதை நாம் காண்கிறோம். தேவனுடைய ஜனங்களாகவும், இயேசுவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் பெற்றுக்கொண்ட ஜனங்களாகவும் இருக்கிறவர்கள் தங்களுடைய சரீரத்தை தேவனுடைய ஆலயமாக பாதுகாக்க வேண்டுமல்லவா? அந்த சரீரத்தோடு பாவக்காரியங்களில் ஈடுபடுவோமானால் நம்மோடிருக்கும் கர்த்தருக்கு மகிமை குறைச்சலை ஏற்படுத்துகிறோம் அல்லவா? கர்த்தராகிய இயேசு இப்பூமியில் முப்பத்து மூன்றரை வருடம் மனிதனோடு மனிதனாக வாழ்ந்தார். அவர் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார். பிதாவினுடைய அன்பை வெளிப்படுத்தினார். அவர் தம்முடைய சரீரத்தை பாவத்திற்கு ஒப்புக்கொடுத்தாரா? அதை வேசியின் சரீரமாக மாற்றினாரா? இல்லையே. அவர் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு மூத்த குமாரனாயிருக்கிறார். நாமெல்லாரும் இளைய குமாரர்களாயிருக்கிறோம். அவரைப்போல நாமும் இவ்வுலகத்தில் நம்முடைய சரீரத்தை பாதுகாத்து தேவனுடைய ஆலயமாகவும், அவரைத்துதிக்கும் பாத்திரமாகவும் நாம் இருக்க வேண்டியது நமது கடமையல்லவா?

சாமுவேல் என்ற தேவனுடைய மனுஷன் தேவனுடைய சந்நிதியில் வளர்க்கப்பட்டு தேவனுக்கு ஏற்ற மகனாக வாழ்ந்தான். தேவன் கூப்பிடும்போது சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்றான். அவர் சொல்லக்கூடிய வார்த்தைகளைக் கேட்டு அதை அப்படியே ஜனங்களுக்கு அறிவித்தான். ஒரு உன்னதமான தீர்க்கதரிசியாக இருந்தான். ஆகையால் உங்களில் இருக்கும் அந்த தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள். உங்கள் மூலமாக தேவனை அறியாத ஜனங்கள் தேவனை அறிந்துகொள்ள அவருடைய அன்பை காண்பியுங்கள். உங்களைக் கொண்டு தேவன் பெரியகாரியங்களை செய்ய உங்களை முழுவதுமாக ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய கர்த்தர் உங்களில் பெரியகாரியங்களைச் செய்வார்.



# நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

## Evangelizing Our Friends -TVOTI



**சபையோடு இணையச்செய்தல்**
**உங்கள் நண்பர்களுக்கு உதவுகிறது**

Getting Involved with the Church Helps Your Friends **பாடம் -9**

**மனப்பாட வசனம்:**

**அப்.2:44 "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்"**

**முன்னுரை:**

நீங்கள் எப்போதாவது ஒரு குழுவோடு சிறப்பான எதையாவது பகிர்ந்து இருக்கிறீர்களா? ஒருவேளை பள்ளியில் ஒரு குழுவோடு விளையாடியிருக்கலாம் அல்லது ஒரு அணியில் விளையாட்டுப் போட்டியில் கலந்திருக்கலாம். இவைகளெல்லாம் தேவனுடைய சாயலில் - சமூகத்தில் படைக்கப்பட்ட நபர்களாகிய நம்முடைய அதிமுக்கியமான அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படக்கூடிய இடங்களாக இருக்கிறது. நாம் ஒரு அணியோடு அல்லது ஒரு குழுவோடு அல்லது கலந்து கொள்ளும்போது, இது உற்சாகமளிக்கிறது, உணர்ச்சியைத் தூண்டுகிறதாயிருக்கிறது. ஏனென்றால்; இங்கே ஒவ்வொருவரும் ஒரு பொதுவான நோக்கத்தையுடையவர்களாய் இருக்கிறோம். எல்லாரும் ஒரே இலக்கையும் நோக்கங்களையும் பூர்த்திசெய்வதற்கு இணைந்து பணியாற்றுகிறோம். நாம் மற்றவர்களோடு இணைந்து செயல்படும் போது, நமது சொந்த வேலையை எல்லோரும் சேர்ந்து செய்கிறோம், இப்பேர்பட்ட அநுபவங்கள் மிகவும் இன்பம் அளிப்பவையாக இருக்கின்றன.

தேவன் அவருடைய சமூகத்தில் நம்மால் இயன்ற அளவுக்கு வேலைசெய்யும்படி நமக்கு வழியை ஏற்படுத்தியுள்ளார். வேதாகமம் இந்த சமூகத்தை **சபை** என்றழைக்கிறது. சபை என்ற பதத்தின் பொருள் "கூட்டம்" என்று புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் இந்த வார்த்த அப்போஸ்தர் நடபடிகள் 19:32 மற்றும் 41ல் கூட்டம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பதம் இயேசு, பேதுரு, பவுல் மேலும் மற்ற அப்போஸ்தலர் காலத்தில் பொதுவாக வழக்கத்தில் இருந்த சாதாரண பதம் ஆகும். இந்த வார்த்தையானது தேவனுடைய ஜனங்களுக்கு மேலும் அவரிடத்தில் அன்பு கூர்ந்து கீழ்ப்படிதலின் மூலம் கிறிஸ்துவுக்குத் தங்களையே அர்ப்பணித்தவர்களுக்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு சிறப்பு வாய்ந்த அர்த்தமுடையதாயிருக்கிறது. **சபை என்பது தங்களுடைய வாழ்வில் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் சமூகமாக இருக்கிறது.**

**வேதாகமம் இது குறித்து என்ன சொல்லுகிறது?**

தேவன் சபையாகிய அவருடைய சமூகத்தில் நாம் பங்குள்ளவர்களாக இருக்க வேண்டுமென விரும்புகிறார். சபை என்பது கிறிஸ்துவின் ஜனங்களுடைய சரீரமாயிருக்கிறது. பவுல் இதன் அர்த்தத்தை எபேசு புத்தகத்தில் நமக்குப் போதிக்கிறார் **"எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்"** (எபே.1:22,23).

கொலேசெயர்1:18ல் **"அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்"** என பவுல் எழுதியுள்ளார்.

இடத்துக்கு பிரயாணம் பண்ணி தொழுது கொள்ளச் சென்றால் அங்கு நாம் முன்பகுதியில் நின்று தொழுதுகொள்ள அனுமதிக்கப்படுவோம்.

**தாழ்மையைக் கற்றுக்கொள்பவர்.**

1. வேதத்தை வாசிப்பவர். ஒரு அரசு அதிகாரி தனது வேதத்தைப் படிக்கிறார். வேதப்பிரதிகள் அபூர்வமாய் கிடைக்கக்கூடியதும் அதிக விலையுள்ளதுமானது.

2. அவரிடம் திறந்த மனமிருந்தது.சிலருக்கு பிலிப்பின் வார்த்தைகள் அவமதிப்பாக இருந்திருக்கலாம் 8:30.உதவி தேவை என்பதை அவன் புரிந்து கொண்டான். சொந்தமாய் வைத்துக்கொள்ளுமளவிற்கு போதிய வேதப்பிரதிகள் இல்லை போலும். அது வாசித்தபின் கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தது.

கேள்வி கேட்கப்பயப்படவில்லை.

தேவனுடைய திட்டத்தில் ஒரு போதகன் முக்கியமான பங்குவகிக்கிறான்.அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள். அவரைக்குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? (ரோம.10:14). மாற்றத்துக்கான மாதிரி வழி சுவிசேஷமே இயற்கைக்கு அப்பாற்பட்ட வழிகளால் ஆனது. ஆவியானவரோ தேவதூதனோ அண்ணகனுக்கு ஒன்றும் நேரடியாகச் செய்யவில்லை.

1. அவனுக்கு நேரடியாக சுவிசேஷத்தை அறிவிக்கவில்லை.

2. சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும்படி அவனுடைய இதயத்தைத் மேன்மையாக்கவில்லை. ஆவியானவர் அவருடைய இதயத்தைத் தொட்டார் என்று ஒன்றும் சொல்லப்படவில்லை.

3. ஆவிக்குரிய வெளிப்பாடு ஒன்றும் கொடுக்கவில்லை.

4. சொல்லப்பட்ட அனுபத்தைவிட மேலான ஒரு உணர்வைக் கொடுக்கவில்லை. சுவிசேஷத்தை பிரசங்கிக்க தேவன் நேரடியாக அழைக்கவில்லை. தேவ தூதர்கள் யாரையும் அனுப்பவுமில்லை. மனிதர்களை இரட்சிப்பதில் மனிதர்களே கருவிகளாக பயன்படவேண்டுமென்று தேவன் கட்டளையிட்டார்.அந்த அண்ணகர் சுவிசேஷத்தைக் கேட்டதினாலும் விசுவாசித்ததினாலும் இரட்சிக்கப்பட்டார். தேவன் பிலிப்பை நடத்தியது பற்றி அந்த அண்ணகருக்கு ஒன்றும் தெரியாது. ஒரு உண்மையான பாவியையும் பிரசங்கியாரையும் ஒன்றிணைப்பதே தேவனுடைய திட்டமாயிருந்தது. பின்பு தேவ வார்த்தை தன்னுடைய வேலையை செய்யட்டும்.

மாதிரி செய்தி, இயேசு.

1. அவர் ஏசாயா53:78ஐ வாசித்துக் கொண்டிருக்கிறார். போதகர்களுக்கு பிரச்சனை. வாசித்த பகுதி மேசியாவுக்கு பொருத்தமாயிருந்தது. ஆனால் அது மேசியாவைப்பற்றிய நடைமுறையிலுள்ள சிந்தனைகளுக்கு ஒத்துவரவில்லை.

2. துன்பப்படுகிற கொள்கையோடு மேசியா இராஜாவாக வருவார் என்ற சிந்தை ஒத்துப்போகாது என்பது அவர்களுக்குத் தெரியும். அதே வசனத்தில் தொடங்கி பிலிப்பு இயேசுவைப் பிரசங்கித்தார் (8:30-35).

1. உலகத்திலுள்ள வாழ்வியல் காரியங்களைக் குறித்தெல்லாம் அவன் பேசிக்கொண்டிருக்கவில்லை.

2. மேசியா கட்டாயம் துன்பப்பட வேண்டுமென்று போதித்தான்.

3. இயேசுவையே அவன் பிரசங்கித்தான். அந்த இயேசு ஒருவரே. அனைத்து காரிங்களையும் இயேசு நிறைவேற்றினார்.

ஒரு செம்மறியாட்டைப் போல இயேசு தம்மைக் குற்றப்படுத்தியவர்கள் முன் அமைதியாயிருந்தார்.

அவர்களுடைய அநியாயமான குற்றச் சாட்டுகளுக்கு முன் அவர் தன்னைக்காப்பாற்ற நினைக்கவில்லை. அவர் கேலி செய்யப்பட்டு முகத்தில் துப்பப்பட்டு முகத்தில் அடிக்கப்பட்டு தாழ்மைப் படுத்தப்பட்டார்.

அவருடைய நியாயம் எடுபட்டுப்போனது. அதாவது அவர் நீதியைப் பெறவில்லை.



**உலகத்திலிருக்கிறவன் பிசாசு:** "பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" எனக் காண்கிறோம் (1யோவா.4:4). நம்மில் இருக்கிற பெரியவரை அநேகர் மறந்து உலகத்திலிருக்கிற பிசாசுக்கு அடிபணிந்துபோய்விடுகிறார்கள். பொல்லாத பிசாசு கண்களின் இச்சையையும், மாம்சத்தின் இச்சையையும், ஜீவனத்தின் பெருமையையும் அவர்களிலே விதைத்துவிடுகிறான். எப்படி ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் நல்ல பயிர்களை பயிர் செய்திருக்கும்போது, களைகள் முளைக்கின்றதோ, அதைப்போல பிசாசு தேவனுடைய ஜனங்கள் மத்தியில் களைகளை விதைக்கிறான். அந்தக்களைகளில் சில மேற்கூறியவைகள். "பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே" (1யோவா.3:12). காயீனுக்குள்ளாக பொறாமை உண்டானது. இப்படிப்பட்ட சிந்தனைகளை விதைக்கிறவன் சத்துரு. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும் உலகத்தின் பிசாசுக்கும் அவனுடைய செயல்பாடுகளுக்கும் நீங்கள் விலகி உங்களை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" என வாசிக்கிறோம் (1யோவா.3:8). இந்த உலகத்தில் பாவத்தின் கீழ் அநேகர் அடிமைப்பட்டுக்கிடக்கின்றனர். இவர்களை மீட்கவே தேவகுமாரன் வெளிப்பட்டார். இவரை விசுவாசியாதவர்கள் இன்னும் பாவத்திலே கிடக்கிறார்கள். ஆகையால் பாவம் அவர்களை ஆட்கொள்ளுகிறது. இப்படிப்பட்டவர்கள் பிசாசினாலுண்டாயிருக்கிறார்கள். பிசாசினுடைய செயல்பாடுகள் இவர்களிடம் காணப்படுகிறது. பாவத்திற்கு அதிபதியாக இருந்த பிசாசை தம்முடைய சிலுவை மரணத்தின் மூலம் ஜெயித்தார் இயேசு. "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராகினார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவ காலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்" என்று எபி.2:14,15 வசனங்களில் படிக்கிறோம். இப்படி அவர் சிலுவையில் தம்முடைய ஜீவனைக் கொடுத்து நம்மை மீட்டுள்ளார். மீட்கப்பட்ட நாம் பிசாசின் காரியங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" என்று பேதுரு நமக்கு நினைப்பூட்டி எச்சரிக்கிறார் (1பேது.5:8). டிஸ்கவரி சேனலில் பார்த்திருப்பீர்கள், சிங்கம் எவ்விதமாக வேட்டையாடுகிறது என்று அதைப்போல பிசாசு எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆகையால் நாம் மிகவும் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். நாம் விழித்திராத பொழுது நம்மை ஏமாற்றி வஞ்சித்துவிடுவான். நம்முடைய பெலவீனங்களுக்கு ஏற்றாற்போல பிசாசு காரியங்களை நடப்பிப்பான். யூதாஸ் என்ற சீஷனுக்குள்ளாக பண ஆசை இருந்தது அதை வைத்து பிசாசு அவனை தந்திரமாக தன்வசமாக்கிக்கொண்டான். அந்த ஆசையில் யூதாஸ் இழுப்புண்டுபோனான். ஏனெனில் "பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர் கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்" என

படிக்கிறோம் (லூக்.22:3). அவனுக்குள் சாத்தான் புகுந்தான் என்றால் அவன் சாத்தானுக்கு இடமளித்தான் எனக் காண்கிறோம். அவன் இடம் கொடாமல் அவனுக்குள் சாத்தான் புக முடியாது. அவனுக்குள்ளாக முன்னமே பண ஆசை இருந்தது என பார்த்தோம். அன்பானவர்களே, நமக்குள்ளாக இருக்கும் பெலவீனங்களைப் பயன்படுத்தி பிசாசு தந்திரமாக நம்மை வஞ்சிக்கிறான். இதை நீங்கள் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும்.

உங்களில் இருக்கிற பிதாவாகிய தேவன் பெரியவர். அவருக்கு நீங்கள் முதலிடம் கொடுங்கள். அவர் உங்களை வழிநடத்தும்படியாக அவருடைய வல்லமையுள்ள வசனங்களுக்குச் செவிகொடுங்கள். அவரால் அனுப்பப்பட்ட ஆண்டவர் இயேசுவின் சத்தம் கேட்டு அவர் மூலமாக பாவமன்னிப்பு பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் உலகத்தில் பெரியவராயிருக்கலாம் அல்லது ஒரு சிறியவராயிருக்கலாம். ஆனால் நீங்கள் விசுவாசித்து கர்த்தரை ஏற்றுக்கொள்ளும்போது உங்கள் மூலம் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். உலகத்தில் இருப்பவனிலும் உங்களில் இருக்கிற பெரியவரை நீங்கள் கனம்பண்ணும்போது நீங்கள் எல்லாவற்றிலும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்குமா?**

ஆம், "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோவா.5:4). உலகத்தை பலர் ஜெயித்துவிட்டதாக சொல்லுகிறார்கள். உலகத்தை ஜெயிப்பது அவ்வளவு சுலபமல்ல, ஒருவன் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து மறுபடியும் பிறக்கும்போது அவனால் இந்த உலகத்தையும் உலகத்திலிருந்து எழும்பக்கூடிய காரியங்களையும் ஜெயிக்கமுடியும். தேவனால் பிறக்காத ஒரு மனிதனால் இந்த உலகத்தை ஜெயிக்கமுடியாது. அதுவும் விசுவாசமில்லாமல் ஒருவனாலும் இந்த உலகத்தை ஜெயிக்க முடியாது. எல்லாவற்றிற்கும் விசுவாசமே மூலகாரணமாயிருக்கிறது. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் எனக் காண்கிறோம். நம்முடைய முற்பிதாக்கள் விசுவாசத்தினாலே இராஜ்யங்களை ஜெயித்தார்கள். வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். ஆக, ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டு தேவனுக்கு ஏற்றகாரியங்களில் ஈடுபடவேண்டும். ஒருவேளை நீங்கள் உலகத்தில் உயர் பதவியில் இருக்கிறவர்களுடைய குடும்பத்தில் பிறந்தவராயிருக்கலாம், அல்லது இராஜவம்சத்தைச் சேர்ந்தவராயிருக்கலாம் எப்படிப்பட்டவராயிருந்தாலும். யாவரும் தேவனால் மறுபடியும் பிறக்கவேண்டும். இல்லையேல் அவன் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமுடியாது. இந்த உலகத்தையும் ஜெயிக்க முடியாது. நீங்கள் உலகத்தில் மறுபடியும் பிறக்க கர்த்தருடைய வசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## நடப்புச்செய்திகள்

❒ தமிழகத்தில் தடைசெய்யப்பட்ட நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர் கே.பழனிசாமி எச்சரித்துள்ளார்.

❒ இஸ்ரேலில் யூதர்கள் குடியிருக்கும் 'கோலன் ஹைட்ஸ்' என்ற கிராமத்தின் பெயரை 'டிரம்ப் ஹைட்ஸ்' என மாற்றியதற்காக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேட்டன்யாஹீவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.



## எத்தியோப்பிய அண்ணகனின் மாற்றம்
## Conversion of Ethiopian Eunuch
## (அப்போஸ்தலர் 8:26-40) பாடம் - 32

*-Jerry*




1. அநேகமாக ஒரு யூதப் பண்டிகையின்போது சுமார் 1000 மைல்கள் பிரயாணப்பட்டு எருசலேமுக்கு தேவனைத் தொழுது கொள்ள வந்த பெயர் குறிப்பிடப்படாத ஒருவனோடு இந்தச் சம்பவங்களை வேதவாக்கியங்கள் தொர்புடையதாக்குகிறது. இது கண்டிப்பாக வாழ்நாளில் ஒரு அனுபவமாயிருக்க வேண்டும். அவனுடைய விசுவாசம் பலப்படுத்தப்பட்டது. அவருடைய ஆவிக்குரியதன்மை அவன் தன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது தனிமையிலே வேதவாக்கியங்களைப் படிக்குமளவிற்கு இன்னும் அதிகம் படிக்கவேண்டுமென்னுமளவிற்கு உந்தப்பட்டது.

2. இந்த மனிதன் எத்தியோப்பிய அண்ணகன் என்றறியப்படுகிறான். இது மற்றவர்களுக்கான மாதிரி மனமாற்றம் என்றழைக்கப்படுகிறது.

3. பிலிப்பு ஆத்துமாக்களைக் குறித்து ஆழ்ந்த சிந்தையுள்ளவனாயிருந்தான். 21:8ல் அவன் சுவிசேஷகனாகிய பிலிப்பு என்றழைக்கப்படுகிறான்.தேவதூதன் பிரசங்கியாகிய பிலிப்புவிடம் சென்று நீ வனாந்தரமார்க்கமாய் போ என்றான் 8:26.

1. கவனிக்கவும் தூதன் பிலிப்புவிடம் வார்த்தைகளாலே பேசினான். அது ஏதோ உணர்தல் சம்பந்தப்பட்டதல்ல. ஆனால் புரிந்து கொள்ளக்கூடிய வார்த்தைகள்.

2. பிலிப்பு சமாரியாவிலே இருக்கிறான். மிகப் பெரிய எழுப்புதலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறான். நூற்றுக்கணக்கான மக்கள் செவிசாய்த்து திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர். இப்பொழுது ஆவியானவர் இதை விட்டு காசாவுக்குச் செல்லும்படி கட்டளையிடுகிறார். அது பாலைவனமாயிருந்தது. அவன் அண்ணகனை விட ஒரு நாளாவது முந்திப்புறப்பட வேண்டும்.

3. ஒரு தெரியாத நம்முடைய கருத்துப்படி அறிவற்ற நோக்கத்திற்காக பிலிப்பு கீழ்ப்படிந்தார். ஏன் ஒரு வனாந்திரத்திற்கு?

4. அதே ஆவியானவர் நமது பக்கத்துவீட்டாருக்கு போதிக்கச் சொல்லுவார்.

அந்த மாதிரி பார்வையாளர் - அந்த அண்ணகர்.யூதன் அல்லது யூதமார்க்கத்துக்கு மனம் மாறி வந்தவர் தொழுது கொள்ளும்படி எருசலேமுக்குச் சென்றுள்ளார்.

1.யூதர்களுக்கு கனமான பதவி கிடைப்பது அசாதாரணமான ஒன்றல்ல.

2. மாதிரி யோசேப்பு நெகேமியா - அர்த்த சஷ்ட்டா இராஜாவுக்கு பானபாத்திரக்காரன்.

3. அவனுக்கு மிகப் பெரிய அதிகாரமிருந்தது. அவன் கந்தாகே என்னும் எத்தியோப்பிய ராணியின் பொருளாளராக (நிதி மந்திரியாக) இருந்தான்.

பக்தியுள்ளவன், உண்மையுள்ளவன்.

1. அவன் தொழுதுகொள்வதற்காக ஒன்றிரண்டு மாதங்கள் வேலையை விட்டு விடுப்பில் செல்வார்.

2. எருசலேமுக்கு சுமார் 1000 மைல்கள் தென்திசையில் எத்தியோப்பியா இருக்கிறது.

3. ரொம்பவும் உண்மையுள்ளவன் அதிக பக்தியுள்ளவன் மிகவும் நல்ல ஒரு மணிதனாக இருந்திருக்கவேண்டும். ஆனால் தவறு நடக்கிறது.

4. அவர் அண்ணகர் என்று ஏன் குறிப்பிடவேண்டும்?

உபாகமம்23:1ன்படி ஒரு அண்ணகன் சபையில் பிரவேசிக்கத் தடை செய்யப்பட்டுள்ளான். விருத்தசேதனமில்லாத புறஜாதியான் தொழுதுகொள்ள கூடிய அளவைவிட நெருக்கமாக தொழ முடியாது. தேவன் யாரை வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்வார் (ஏசா.56:3-5) ஆனால் அது எருசலேமிலே அவருக்கு அனுபவமாயிருந்திருக்கலாம். இன்றைக்கும் ஆயிரக்கணக்கான மைல்கள் விசேஷமான

**வேதகம கேள்விகள்**



வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்

**தற்சோதனை பகுதி – 10**

**10. பழிவாங்குவதை வேதாகமம் அனுமதிக்கிறதா?**

1. பழிவாங்குதல் கர்த்தருக்குரியது ☐ வசன ஆதாரம் ---------

---------------------------------------------------------------------

2. பழிவாங்குவதால் பகை தீரும் ☐ வசன ஆதாரம்----------

---------------------------------------------------------------------

3. தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம் ☐ வசன ஆதாரம்----------

---------------------------------------------------------------------

4. தீமைக்குத் தீமையை செய்து சரிக்கட்டலாம் ☐ வசன ஆதாரம் ---------

---------------------------------------------------------------------

5. பகை விரோதங்களை எழுப்பும் ☐ வசன ஆதாரம்----------

---------------------------------------------------------------------

6. பகையை மறைப்பது நல்லது ☐ வசன ஆதாரம்----------

---------------------------------------------------------------------

7. பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள் ☐ வசன ஆதாரம்-

---------------------------------------------------------------------

8. தீமையை நன்மையினாலே வெல்ல முடியாது ☐ வசன ஆதாரம்----------


---------------------------------------------------------------------

9. உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள் ☐ வசன ஆதாரம்---------------------------------------------------------------

10. உனக்கடுத்தவனை சிநேகித்து, உன் சத்துருவை பகைப்பாயாக ☐ வசன ஆதாரம்---------------------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை நகர்ப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**





# பழைய பாவமனிதன் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

## திருடுதல் - Stealing

*-J.C.Choate*

**-சென்ற மாத தொடர்...**

மீண்டும் இயேசு; "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" என்றார் (மத்.6:19-21). இன்னொரு சம்பவத்தில் இயேசு, "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்றார் (யோவா.10:10).

ஒருசமயம் இயேசு எருசலேமில் இருக்கையில், "இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்றவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து; என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்" (மத்.21:12,13). இது இன்றுள்ள பல மார்க்க ஸ்தலங்களை நமக்கு நினைப்பூட்டுகிறது. அவைகளெல்லாம் தேவனுடைய ஆலயங்கள் அல்ல அல்லது கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்றவைகளும் அல்ல. ஆனால் மார்க்க ஸ்தலத்தைப் போலிருந்தாலும் அவைகள் கள்ளர் குகைகள். அங்குள்ள எல்லாவகையான மக்களும் அங்கு வருகின்ற ஏழை மக்களிடமிருந்து இலாபகரமானவற்றை எடுத்துக் கொண்டு வருகின்றார்கள். அவர்கள் எல்லாவித பொருட்களையும் விற்று அதிகப் படியான கிரயத்தை எடுத்து அவர்களை ஏமாற்றி எவ்வளவு கூடுமோ அந்த அளவிற்கு அவர்களின் இலாபகரமானவற்றை எடுத்துக் கொள்கின்றனர். இப்படிப்பட்ட பழக்கவழக்கங்கள் வெட்கத்திற்குரியது. ஆனால் இயேசு எருசலேமிலிருந்த தேவாலயத்திலும் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததைக் கண்டு, இது மெய்யாகவே பரலோகத்தின் தேவனை அடையாளப்படுத்தவில்லை என இப்படிப்பட்ட பழக்கவழக்கங்களைக் கடிந்துகொண்டார்.

இயேசு பிதாவினிடத்திற்குச் செல்ல ஒரே வழி என போதித்தார் (யோவா.14:6), இருந்தபோதிலும் மனிதன் உறுதியாக பரலோகத்திற்குச் செல்ல பல வழிகள் உண்டென போதிக்கின்றனர். இயேசு யோவா.10:1-ல் இதே கொள்கையை போதித்தார். அவர் சொல்லும்போது ஆட்டுத் தொழுவத்துக்குள் பிரவேசிக்க ஒரே வாசல் அல்லது சபை உள்ளது என்றார். தொடர்ந்து சொல்லுகையில் வேறுவழியாய் ஏறுகிற ஒருவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான் என்றார்.

நாம் இயேசு தாமே எவ்வாறு இரண்டு கள்ளர்கள் நடுவே சிலுவையில் அறையப்பட்டார் என்பதைப் பற்றிய விஷயத்தை நன்கு அறிவோம். மெய்யாகவே இயேசுவினிடத்தில் பாவமில்லை, மரிக்கவேண்டியதுமில்லை, ஆனால் அவர் காட்டிக்கொடுக்கப்பட்டார், பொய்யாக குற்றஞ்சாட்டப்பட்டார். பொய்யான நியாய விசாரணை கொடுத்தனர். மேலும் முடிந்தவரை குற்றப்படுத்த வகை தேடினார்கள். அவர் இரண்டு

கள்ளர்கள் நடுவில் சிலுவையிலறையப்பட்டார். அந்த கள்ளர்களில் ஒருவன் மிகவும் புத்திசாலி, நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். இவரோ ஒரு குற்றமும் செய்யவில்லையே என்றான். அந்த புத்தியுள்ள கள்ளன் அவருடைய ராஜ்யத்தில் தான் வரும்போது தன்னை நினைத்தருளும் என்று கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டான். இயேசு அவனை நோக்கி:இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் அல்லது நீதிமான்கள் மரித்த இடத்தில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். கிறிஸ்துவினால் அவனை அவ்விடத்திலே மன்னிக்க முடிந்தது, அப்படியே அவர் செய்தார். சிலர் இதை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தி இன்று ஒருவன் எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்கின்றனர். ஆனால் நம்முடைய சூழ்நிலை அவனுடைய சூழ்நிலைக்கு ஒத்ததாக இல்லை. அவன் கிறிஸ்து சிலுவையில் மரிப்பதற்கு முன் வாழ்ந்தான், நாமோ கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் வாழ்கிறோம். கர்த்தருடைய சித்தமும் மன்னிக்கும் தன்மையும் முத்திரையிடப்பட்டிருந்தது மேலும் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் கட்டப்பட்டிருந்தது.

கிறிஸ்து இப்பூமியின் வாழ்கையில் ஒருவனுடைய பாவங்களை அந்த இடத்திலே மன்னிக்க முடிந்தது ஆனால் அவருடைய மரணத்திற்குப் பிறகு நாம் இரட்சிக்கப்பட என்னசெய்ய வேண்டுமென அவர் விரும்புகிறார் என்பதை நாம் கண்டிப்பாக அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளவேண்டும். அதன் பின் நாம், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்.16:16) என அறிவுறுத்தப்படுகிறோம். இது எல்லாரும் கைக்கொள்ள வேண்டியது, ஆனபடியினால் ஒருவரும் தவிர்க்க முடியாதது. பேதுரு ஒரு திருடனாகயிருந்து கஷ்டப்படுவது ஒரு வெட்கத்திற்குரிய காரியம் என்றார். நாம் "ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது" என்று 1பேது.4:15-ல் வாசிக்கிறோம். மீண்டும் பவுல், "எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது" என்றான் (ரோம.13:9).

**-தொடரும்...**

**பொது அறிவு சோதனை**

1. **தமிழ் நாட்டின் நுழைவாயில் எனப்படுவது எது?**
   **அ) சென்னை ஆ) கோவை இ) தூத்துக்குடி**
2. **இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?**
   **அ) வில்சன் ஆ) ஜோன்ஸ்சால்க் இ) லூயிஸ்**
3. **பசுமை புரட்சியின் தாயகம் எது?**
   **அ) மெக்ஸிகோ ஆ) தைவான் இ) தென்கொரியா**
4. **உலகின் முதல் செயற்கைகோளை உருவாக்கிய நாடு எது?**
   **அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா இ) ஜப்பான்**
5. **9-வது ஆசிய கோப்பைபோட்டி எந்த நாட்டில் நடைபெறும்?**
   **அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) இலங்கை**

**விடை 1. தூத்துக்குடி 2. ஜோன்ஸ்சால்க் 3. மெக்ஸிகோ 4. ரஷ்யா 5. பாகிஸ்தான்**



ஜெபிக்கும்போது கூடியிருக்கிற சிலர் தங்கள் தங்கள் மனதில் என்ன நினைத்திருக்கிறார்களோ அதைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள், இல்லாவிட்டால் எதற்காக அந்த நபர் விண்ணப்பிக்கிறாரோ அந்த விண்ணப்பத்தில் முழுகவனம் செலுத்திக் கொண்டிருப்பவருக்கு இடையூராக ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இப்படி ஜெபிப்பது ஒருமனப்பட்டு ஜெபிக்கின்ற ஜெபமாகவும் விண்ணப்பமாகவும் இருக்கமுடியாது. ஒருமனம் என்றால் ஒரே காரியத்தை கூடியிருக்கிற அனைவரும் மனதில் கொண்டு ஜெபிப்பதாகும். இடைவிடாமல் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் என வேதம் கூறாமல் ''எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்'' என்று கூறுகிறது ஆங்கில வேதாகமத்தில் "Give thanks in all circumstances" என்றுள்ளது. அப்படியானால் யோபு கூறினதுபோல் 'கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்' என எச்சூழலிலும் ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும்.

இரண்டாவதாக, அந்த ஸ்திரீகள் ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தொடர்ந்து தரித்திருந்தார்கள். சில ஆங்கில வேதாகமங்களில் Continued மற்றும் Constantly என்று எழுதப்பட்டுள்ளது. ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தொடர்ச்சியாக மற்றும் இடைவிடாமல் இருந்திருக்கிறார்கள். நாம் இங்கே சற்று சிந்திப்போம். நாம் கூடி ஜெபிக்கையில் இவ்வாறு இருக்கிறோமா? அல்லது ஜெபம் முடிவதற்குள் நம்சொந்த வேலைகளினிமித்தம் இடையிலேயே எழுந்து சென்று விடுகிறோமா? ஆதி அப்போஸ்தலர்களோடேகூட, ஸ்திரீகளும் உறுதியுடனிருந்தனர். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்ற வசனத்தின்படி சபை சகோதரர் களோடு ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தரித்திருந்த சமயத்தில் கிறிஸ்துவின் சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. இன்றும் நம் தமிழகம் முழுவதும், ஏன் நம் பாரதம் முழுவதும் ஆங்காங்கே கிறிஸ்து தமது சபையை உருவாக்க வல்லவராயிருக்கிறாரே. நம்மைப் பாவத்திலிருந்து மீட்க இரத்தம் சிந்தி மரித்த இயேசுவுக்காக நீ என்ன செய்யப்போகிறாய்? என்பதை சிந்தித்துப்பார். முதலாவது மீட்பின் செய்தியை யூதர்களுக்கு அறிவித்த அன்னாளைப் போலவும், முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்திரீகளைப் போலவும், இயேசுவுக்காக இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்காக எதையும் செய்ய முதலாவதாக இருப்போம். கர்த்தர் தாமே அவருக்குப் பிரியமானதைச் செய்ய நமக்கு உதவிசெய்வாராக!

## தெரிந்துகொள்வோம்

*-K.R.K.Ravi Asir*

▶ பண்டைக்கால ஜப்பானில் பல் டாக்டர்கள் வெறுங்கைகளை உபயோகித்து விரல்களால்தான் பற்களைப் பிடுங்கினார்கள்.

▶ பச்சோந்தியின் நாக்கு அதன் உடலின் நீளத்தைப் போல இரண்டு மடங்கு பெரியது.

▶ உலகில் தபால் தலைகள் மூன்று வடிவங்களில் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. அவை முக்கோணம், சதுரம், நீண்ட சதுரம்.

மட்டும் கடைசிவரை ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள் என்பர். ஆனால் இந்த அன்னாள் அந்த உறவை இழந்த போதிலும் தேவனைப்பற்றிக் கொண்டது எவ்வளவு விசேஷித்த மேன்மையாயிருக்கிறது! சங்கீதக்காரனாகிய தாவீது இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்கிறார். ஆம், இதன்படி இவள் ஒரு பாக்கியவதி, தேவலாயத்தை விட்டு நீங்காமல் உபவாசித்து ஜெபம் பண்ணி அதாவது மரியாள் இயேசுவின் பாதத்தைவிட்டு நீங்காமல் நல்ல பங்கை தெரிந்துகொண்டதுபோல, இவளும் தேவாலயத்தை விட்டு நீங்காது இருந்திருக்கிறாள்.

அன்பு சகோதரியே, நம்மை சுற்றிலும் உள்ள அநேகர் இந்த மீட்பரைப் பற்றி அறியாமலிருக்கிறார்கள். இந்த மீட்பராகிய இயேசுவைக் குறித்து அறிவித்தும் ஏற்றுக்கொள்ளாமல் ஏளனம் செய்கிறவர்களும் அநேகர். இப்படியிருக்க, நீங்கள் உங்களைக் குறித்தும், உங்களுடைய இழப்பு, வேதனை, கஷ்டம், நஷ்டம், உங்களுடைய உறவுகள் இதுபோன்ற இன்னும் எத்தனையோ காரியங்களைக் குறித்தும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறீர்களா? மார்த்தாளைப்போல அநேகக் காரியங்களைக் குறித்து கவலை கொண்டிருப்போமானால் நாம் ஒன்றையும் சாதிக்கப்போவதில்லை. மரித்தோர் மரித்தோரை அடக்கம்செய்யட்டும், நீயோ என்னைப் பின்பற்றி வா என இயேசு கூறிய வார்த்தை உங்கள் செவியில் விழவில்லையா? இயேசுவை அறிந்தும், அறியாதவர்களைப்போல, ஆவியில் மரித்தவர்களாக ஏனோ, தானோவென்று ஜீவிப்பதை தேவன் ஒருபோதும் விரும்புகிறதில்லை. நம்மை நாமே தேவ சமூகத்தில் குணப்படுத்திக்கொண்டு மற்றவர்களை ஸ்திரப்படுத்த இந்த மீட்பின் செய்தியை அறிவிப்போம். மேன்மையான இந்தப் பணிக்கு ஈடான ஒரு பணியும் இவ்வுலகில் இல்லை. இழந்த காரியங்களையே நினைத்துக் கொண்டிராமல் வரப்போகும் பரலோக மேன்மையை நினைத்து, ஒவ்வொருநாளும் இழந்துகொண்டிருக்கிற ஸ்திரீகளைக் காப்பாற்றுவோம். அன்னாளைப் போல இரவும் பகலும் தேவசமூகத்தை விட்டு நீங்காமல் தனிப்பட்ட முறையில் உபவாசித்து, ஜெபித்து மீட்பின் செய்தியை அறிவிக்க ஆயத்தப்படுவோம்.

**முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் (Attended the First Prayer Meeting) :**

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி, அவர்களை நோக்கி பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறும்படி எருசலேமை விட்டுப் போகாமல் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப்.1:3-5). அதன்படி “அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்” (அப்.1:14). இந்த ஜெபக்கூட்டம் இயேசு பரமேறிச்சென்றபின் கூடின முதல் ஜெபக்கூட்டம். அந்த முதல் ஜெபக்கூட்டத்தில் ஸ்திரீகளும் இயேசுவின் தாயாகிய மரியாளும் இருந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்களெல்லாரும் இவர்களோடு ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அந்த ஸ்திரீகள் செய்த காரியங்கள் இரண்டு.

**ஒன்று,** ஒருமனப்பட்டவர்களாயிருந்தார்கள். இயேசுவின் நாமத்தில் கூடுகிற அன்பு சகோதரியே, உங்களிடத்தில் இவ்விதமான ஒருமனமிருக்கிறதா? சபையில் ஒருவர்



## வேத அறிவுப்போட்டி 224–ன் விடைகள்

1. ரூத் - ரூத்.2:17
2. இயேசு - யோவா.8:58
3. சவுலை, சாமுவேல் - 1சாமு.15:11
4. துரோவா - அப்.20:7
5. தாவீது - 2சாமு.16:12
6. அன்பாய் நடக்கிறவனல்ல - ரோ.14:15
7. சாலொமோன் - 1இரா.10:21
8. பவுல் - 1கொ.7:7
9. ஆசாரியரைச் - 2இரா.12:16
10. பவுல் - 2கொ.13:9

## வேத அறிவுப்போட்டி 225–ன் விடைகள்

1. தாவீது - 1நாளா.22:4
2. இல்லை - கலா.4:30
3. எசேக்கியா - 2நாளா.32:30
4. பவுல் - பிலி.3:5
5. ஆம் - எஸ்றா7:1-5
6. பவுல் - கொலோ.2:7
7. சன்பல்லாத்து - நெகே.4:2
8. தெசலோனிக்கே - 1தெச.4:14
9. ஐம்பது - எஸ்த.7:9
10. கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே - 2தெச.2:10

## வேத அறிவுப்போட்டி எண் 224ல் வெற்றிபெற்றவர்கள்

1. R. ஜெபக்கனிமார்க்ஸ் - கூமாபட்டி
2. Mrs. ஞானம்பிலிப் - கோவை
3. Mrs. பிரமிளாரேவதி - கோவை
4. Mrs. நிர்மலாஆபிரகாம் - மதுரை
5. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் - கோவை
6. Mrs. ரூபவல்யா - நாசரேத்
7. J. ஆலிவ் - கோவை
8. Mrs. நவரத்தினம்ஞானராஜ் - நாசரேத்
9. A. டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
10. S. தங்கம் - கன்னியாகுமரி
11. K. ராணி - தூத்துக்குடி
12. T. ஏஞ்சலின்நேசமலர் - கன்னியாகுமரி
13. S. சாந்தகுமாரி - நாசரேத்
14. E. அதிசயம் - பனைகுடி
15. K. ரத்தினாபாய்பிரசாத் - மதுரை
16. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
17. S.V. தனபால் - கொடுமுடி
18. M. முருகன் - நாமக்கல்
19. J. ஜாய்கமலம் - நாசரேத்
20. Mrs. பாலின் மார்ட்டின் - காரைக்குடி
21. M. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
22. R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
23. Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
24. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
25. Mrs. சாந்தாபழநி - தருமபுரி
26. J. மேரிஜெயக்குமார் - மதுரை
27. S. பார்வதி - தூத்துக்குடி
28. P. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
29. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
30. R. அந்தோனியம்மாள் - கலுங்குவிளை
31. P. பூங்கோதை - கோபி
32. S. செல்வராஜ் சாலமோன் - வள்ளியூர்
33. Mrs. பொன்னிவிக்டர் - தாராபுரம்
34. Mrs. ரெஜினாசெல்வராஜ் - நாசரேத்
35. R. ஸ்டெல்லாஇளமதி - திருப்பூர்
36. N. இந்திராஜெபக்கனி - நாசரேத்
37. Mrs. ஜோபிதா - கோவை
38. Mrs. ஜெனிதர்மராஜ் - திருநெல்வேலி
39. Mrs. ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
40. T. ராஜாத்தி - தேனி

## வேத அறிவுப்போட்டி எண் 225ல் வெற்றிபெற்றவர்கள்

1. R. ஞானசிரோன்மணி - மதுரை
2. A. டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
3. Mrs. ரத்தினாபாய்பிரசாத் - மதுரை
4. Mrs. கிறிஸ்டோபல்சாலமோன் - கோவை
5. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
6. S. ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
7. S. சாந்தகுமாரி - நாசரேத்
8. Mrs. ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி
9. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
10. P. சந்திராடேனியேல் - திருநெல்வேலி
11. Mrs. பிரமிளாரேவதி - கோவை
12. Mrs. பாலின்மார்ட்டின் - காரைக்குடி
13. D. அன்புக்கமலம் - காரைக்குடி
14. Mrs. ஜெயமணிராஜம்மாள் - கடலூர்
15. Mrs. தேவபுஸ்பம் - நாசரேத்
16. Mrs. ரெஜினாசெல்வராஜ் - தூத்துக்குடி
17. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
18. Mrs. ஆலிவ்ஜெயபாலன் - கோவை
19. M. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
20. R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
21. Mrs. ஞானம்பிலிப்பு - கோவை
22. R. அந்தோனியம்மாள் - கலுங்குவிலை
23. Mrs. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
24. A. விக்டர்சுவிசேஷமுத்து - தூத்துக்குடி
25. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் - மதுரை
26. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
27. J. மேரிஜெயக்குமார் - மதுரை
28. Mrs. பியூலாஜேசுராஜன் - புதுகை
29. Mrs. சாந்தாபழநி - தருமபுரி
30. M. ஜெபத்தாய் - நாசரேத்
31. Mrs. ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
32. Sis. ராஜம்மாள்மனோகரன் - சென்னை
33. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
34. Tmt. மரகதம்திரவியம் - கோம்பை
35. J. ஜாய் கமலம் - நாசரேத்
36. T. ஏஞ்சலின்நேசமலர் - கன்னியாகுமரி
37. S. தங்கம் - கன்னியாகுமரி
38. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
39. Mrs. ரூபவல்யா - தூத்துக்குடி
40. Mr. அதிசயம் - பனைகுடி

| | | | |
|---|---|---|---|
| 41. Mrs. ஃபிராங்கலினாஜான் | - ஊட்டி | 41. G. பூங்கோதை | - கோபி |
| 42. J. செல்வராஜ் | - தூத்துக்டி | 42. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 43. Mrs. பியூலாஜேசுராஜன் | - புதுகை | 43. D. சாந்தாதேவி | - தேனி |
| 44. N. கமலவேணி | - சென்னை | 44. K. ராணி | - தூத்துக்குடி |
| 45. J.S. ஜெயமேரிதாய் | - திண்டுக்கல் | 45. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 46. Mrs. அன்னம்மாள் | - தூத்துக்குடி | 46. B. ஞானதீபம் ஜெபராஜ் | - திருநெல்வேலி |
| 47. Mrs. தேவபுஸ்பம் | - நாசரேத் | 47. S.V. தனபால் | - ஈரோடு |
| 48. Mrs. அல்லிராணிகாட்வின் | - சென்னை | 48. Mrs. ஹெத்சி செல்வின் | - சென்னை |
| 49. Mrs. ஜெயமணி ராஜம்மாள் | - கடலூர் | 49. E. ஜாய்ஹெலன் புனிதா | - சென்னை |
| 50. Mrs. அன்புக்கமலம் | - சிவகங்கை | 50. T. ராஜாத்தி | - கோம்பை |
| 51. Mrs. ஜாய்ஸ்ஹெலன் புனிதா | - சென்னை | 51. N. கமலவேணி | - சென்னை |
| 52. N. ஜெபத்தாய் | - நாசரேத் | 52. J. டயானாடேனியேல் | - சிவகாசி |
| 53. Mrs. ருக்மணிஜெயசீலன் | - தேனி | 53. M. முருகன் | - நாமக்கல் |
| 54. J. ஜான்ஸி | - ஆனைமலை | 54. Mrs. அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 55. J. விக்டர்சுவிசேஷமுத்து | - தூத்துக்குடி | 55. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 56. Mrs. தேவதாதேவபிரியம் | - சென்னை | 56. K. பாலம்மாள் | - தூத்துக்குடி |
| 57. Sis. ராஜம்மாள்மனோகரன் | - சென்னை | 57. S. செல்வராஜ்சாலமோன் | - திருநெல்வேலி |
| 58. S. ஜாய்சந்திரகாந்தா | - நல்லூர் | 58. Mrs. எபிநேசர்எட்வேர்டு | - கடலூர் |
| | | 59. S. லதா | - தேனி |

' தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ' மாத இதழின் வாசகர்களுக்கும், வேத அறிவுப்போட்டியாளர்களுக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்

ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது உங்களுடைய Ref No: யை எழுதவும்.
அத்துடன் உங்களுடைய முகவரி மற்றும் மொபைல் எண் அவசியம்.
எங்களோடு தொடர்பு கொள்ள வேண்டிய மொபைல் எண் 9443558041
உங்களுடைய நண்பர்களின் முகவரிகளை SMS மூலம் எங்களுக்கு தெரியப்படுத்தினால் நாங்கள் மாத இதழ் அனுப்பி வைப்போம்.

**ஆசிரியர் கடிதம்**

வேதஅறிவுப்போட்டில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் Vol.4 புத்தகம் அனுப்பபப்பட்டுள்ளது பெற்றுக்கொள்ளுங்கள்.

## "யார் இந்த மாபெரு மகனார்"?

நம் தேவைகளை தெரிந்தவர்!
நம் கண்ணீரின் காரணத்தையும் பாரத்தையும் அறிந்தவர்!
மரணத்தை வென்று அதிசயம் புரிந்தவர்!
பாவிகளுக்கு நல்வழியை தெரிவிக்கிறார்!
சாந்தகுணமுள்ளளோர்களுக்கு தமது வழியை போதிக்கிறார்!
பாதாளம் உம்மை போற்றி துதியாது!
மரணம் உம்மை போற்றாது!
எல்லாபொருள்களுக்கும் விலை உண்டு!
உம்முடைய அன்புக்கு விலையேதும் எல்லையேதும் உண்டோ!
அறிவுக்கெட்டாத பேரன்பு உம்முடைய அன்பு!
உயிர் உள்ள நாளெல்லாம் உம்முடைய அருமை பெருமையை
அறிவிப்பேன்!
உயிர் உள்ள நாளெல்லாம் உம்முடைய
அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்!
பெருங்குற்றங்களை மன்னித்து
பெருவாழ்வு அளிக்கும் பெருமானே
இயேசு பெருமானே போற்றி, போற்றி!
நன்றி யேகோவா தேவனே!



கே.எஸ்.மாணிக்கவாசகம்
திருச்சி
நமது இதழின் வாசகர்



# விசேஷித்த மேன்மை
## Special Distinction

பெண்கள் பகுதி

-Glory Arjunan




கடந்த ஜுன் மாத இதழில் வேதாகமத்தில் விசேஷித்த மேன்மையான இடத்திலிருந்த சில ஸ்திரீகளாகிய சிலுவையின் கடைசி (Last At the Cross) வரை இயேசுவோடு இருந்த மகதலேனா மரியாள், யோசேயின் (இயேசுவின் தாயும்கூட) தாயாகிய மரியாள், முதலாவது கல்லறையினிடத்திலிருந்து (First At the Tomb) இயேசுவை தரிசித்த மகதலேனா மரியாள் மற்றும் முதலாவது இயேசுவின் உயிர்த்தெழுதலை அறிவித்த (The First to proclaim Resurrection) மகதலேனா மரியாள் மற்ற மரியாள் ஆகியோரின் மேன்மையான காரியங்களைக் குறித்து வேதாகம ஆதாரத்துடன் அறிந்து கொண்டோம். அதைப்போலவே இன்றும்கூட வேதாகமத்தில் விசேஷித்த மேன்மையான இடத்தைப்பிடித்த வேறு சில சகோதரிகளைக்குறித்து ஆராய்ந்து பார்ப்போம்.

**முதலாவது யூதர்களுக்கு அறிவித்தவள்** (The First Preach to the Jews):

யார் அவள்? எதைப் பற்றி அறிவித்தாள்? லூக்கா2:36,37-ல் அவளைக் காணலாம், "ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமலும், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் (இயேசுவை) பேசினாள்". இந்த தீர்க்கதரிசி எருசலேமிலே தங்களுக்கு மீட்புண்டாக வேண்டும், இரட்சிப்புண்டாக வேண்டுமென காத்திருந்த யூதர்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவித்தாள். பாவத்திலிருந்து யாவரையும் மீட்கப்போகிற இயேசு இவர்தான் என்று யூதர்களுக்கு அறிவித்தாள். அன்பு சகோதரியே, அவளுடைய சூழ்நிலைகளை அறிந்தீர்களா? ஒன்று, அவள் தன் புருஷனோடு ஏழுவருஷம் மட்டுமே வாழ்ந்தவள், அடுத்தாக, அவள் ஏறக்குறைய எண்பத்துநாலு வயதை அடைந்த விதவை. கன்னிப்பருவத்தில் விவாகம் செய்து ஏழு ஆண்டுகள் மட்டுமே புருஷனோடு வாழ்ந்து அதன்பின் ஏறக்குறைய எண்பத்துநாலு வயது வரை விதவைக் கோலம் பூண்டவளாயிருந்த அவளது மனநிலை எப்படியிருந்திருக்கும் என்று சற்றே சிந்திபோம்! அவள் நிச்சயமாகவே தன்னுடைய விதவையிருப்பை குறித்தும் அதிகக் கவலைகொள்ளாதவளாக இருந்திருக்கலாம். அதனால் தான் அவள் தேவாலயத்தை அண்டி, அதை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி ஆராதனை செய்து கொண்டிருந்தாள் என வாசிக்கிறோம். இந்த அன்னாளை நினைக்கும் போது எனக்கு மெய்யாகவே மெய்சிலிர்க்கிறது. பொதுவாக, சமுதாயத்தில் பிள்ளைகளெல்லாரும் தாயையும் தகப்பனையும் விட்டுச் சென்று விடுவார்கள், ஆனால் கணவனும் மனைவியும்

அவள் வழிந்தோடும் ஆவியுடன் கூட வேலை செய்திருப்பாள், அத்தோடு தேவனுக்கு தன்னுடைய சொந்த கைகளினால் இந்த சிறந்த சேவையை செய்யவும் உணர்த்தப்பட்டிருப்பாள். தேவன் இப்படிப்பட்ட சரீரப்பிரகாரமான கரியங்களை ஆராதனையின் பகுதியாகவும் மேலும் சரீர கரங்களால் செய்யக்கூடிய இந்த வேலையை தேவன் தீர்மானித்துள்ளார். அவளுடைய கரங்கள் அந்த நாளில் கர்த்தருக்கென்று இப்பேர்பட்ட சேவை செய்ய அவள் கண்டிப்பாக அவள் உத்வேகத்துடன் செயல்பட்டிருப்பாள்.

இந்த பாத்திரங்கள் வழக்கமாக யூதர்களால் ஆராதனையில் தங்கம் மற்றும் வெள்ளியினால் குறிப்பாக வடிவமைக்கப்பட்டு அர்ப்பணம் செய்யப்பட்டிருக்குமென நான் நிச்சத்திருக்கிறேன், பிறகு இவைகளை தேவாலயத்திற்கென்று தனியாகப் பயன்படுத்தவும் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய மரணத்தையும் அவருடைய அடக்கத்தையும் வர்ணிப்பதில் மிகுந்த கவனத்துடன் இந்த பாத்திரங்களைப் பயன்படுத்துவதில் அக்கறைசெலுத்தினர். அவர்கள் சர்வ சாதாரணமாகவோ, அரைமனதுடனோ இந்த பாத்திரங்களை சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள்.

மாறாக இது ஆராதனையில் ஒரு பகுதியாக இருந்தபடியினால் தங்களுடைய சொந்த நேரத்தை தேவனுடைய திருவிருந்தில் பங்குகொள்ளுவதற்காகவும் யாரெல்லாம் ஆயத்தம் பண்ணினார்களோ அவர்கள் அதை தங்களுடைய சிறப்புரிமையாக எண்ணினார்கள்.

தேவன் சரீரப் பிரகாரமான ஒவ்வொரு செயலில் செய்தது போல, ஆராதனை செய்யும் இடத்தை சுத்தம் செய்வதிலும், சுகமில்லாதவர்களுக்கு உணவு தயாரிப்பதில் அதே மனநிலையை கொண்டிருத்தலும் வேண்டும். எவ்விடத்திலெல்லாம் தேவன் தம்முடைய வேலையைச் செய்யும்படி மனிதகரங்களை நாடுகிறாரோ, அங்கெல்லாம் சந்தோஷத்துடன் அவர்கள் தனிப்பட்ட அழகான ஆராதனை என தங்களை அந்த சேவைக்கு ஒப்புக் கொடுத்தார்கள்.

நாம் குறுகிய பார்வைகொண்டிருந்தபோது எவ்வளவு காரியங்களை இழந்திருக்கிறோம், நாம் தேவனோடு நெருக்கமான உறவுக்குரிய சிறந்த வாய்ப்புகளை காணத் தவறியிருக்கிறோம்.




**JOIN OUR**

**WORLD EVANGELISM BIBLE SCHOOL**

**RIGHT NOW**

Contact Us: 94435 58041


**ஜெபியுங்கள்**



- சபைகளில் உள்ள ஆத்துமாக்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர...
- அவரவர் தாம் அழைக்கப்பட்ட அழைப்பிலே நிலைத்திருக்க...
- வட மாநிலங்களில் உள்ள ஜனங்கள் கர்த்தரை அறிந்துகொள்ள...
- இந்தியாவில் சுவிசேஷத்தை அறிவிக்கிற அனைவருக்காக...
- நாளுக்கு நாள் குறைந்து வரும் தண்ணீர் பற்றாக்குறை தீர...
- உலக அமைதிக்காக, அணுஆயுதங்களை குறைக்க...
- மனித நேயமும், மனித உரிமையும் உலகஅளவில் வளர்ச்சிடைய...



## இயேசு கிறிஸ்து

அநேக ஜனங்கள் இயேசு கிறிஸ்து ஒரு மாபெரும் போதகராக இருந்தார் என சர்வ சாதாரணமாக நினைக்கின்றனர். ஆனால் கிறிஸ்தவர்கள் அவர் சாதாரணமாக மனுஷனைக் காட்டிலும் அதிகமதிகமான அளவிற்கு உயர்ந்தவராக இருந்தார் என நம்புகின்றனர். அவரது மரணமும் உயிர்த்தெழுதலும் உலக வரலாற்றையே முற்றிலுமாக மாற்றிப்போட்து. கிறிஸ்துவின் அன்பு, ஜனங்களை ஒரு உண்மைக்குள்ளும் பிதாவாகிய தேவனோடு கூட ஒரு அர்த்தமுள்ள உறவுக்குள்ளும் பிரவேசிக்கச் செய்கிறது.

**இயேசு...**

### முழுவதும் மனுஷனானவர்

- இவர் மனுஷ சிசுவாகப் பிறந்தார்
- இவர் மானிடருடைய சோதனைகளையும் வேதனைகளையும் அநுபவித்தார்
- இவர் மாம்சத்தில் பாடுபட்டு மனுஷனாக மரித்தார்

மாற்.1:12-13; லூக்.2:1-21; பிலி.2:5-8

### பாவமில்லாதவர்

- இவர் சோதிக்கப்பட்டபோதும் பாவஞ்செய்ய வில்லை
- இவர் தண்டனையையும் மரணத்தையும் அநுபவிக்கத் தகுதியானவராக இருக்கவில்லை.

மத்.4:1-11; எபி.4:15

### முழுவதும் தெய்வீகத்தன்மை கொண்டவர்

- இவர் தேவனுடைய குமாரன்
- இவர் தேவனுடைய தற்சுரூபம், வார்த்தை' மாம்சமாகி மனுக்குலத்தை மீட்கும்படி பூமிக்கு வந்தது

யோவா.1:1,14; 20:21

### மேசியா

- பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்ட மேசியா இவரே
- இவருடைய ராஜ்யம், சகல தேசங்களிலுமிருந்து அன்பிலும் சமாதானத்திலும் கட்டப்பட்டிருக்கிற இவருடைய சீஷர்கள் இருக்கிற தேவனுடைய ராஜ்யமாக இருக்கிறது

ஏசா.53; மீகா5:2; மாற்.14:61-62, யோவா.4:25-42, 18:36

### இரட்சகர்


- இவர் பாவமில்லாதவராய் இருந்தபோதும், இவர் மனுக்குலத்தைக் இரட்சிக்கும்படி மரணத்தைத் தெரிந்துகொண்டு மனுக்குலத்தின் பாவங்களுக்கான அவர்களுடைய தண்டனையை தானே ஏற்றுக்கொண்டார்
- இவர் தம்முடைய உயிர்த்தெழுதலின் மூலம் மரணம் மற்றும் பாவத்தையும் பிசாசு மற்றும் நரகத்தையும் ஜெயித்தார்
- இவர் தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவனை வாக்களிக்கிறார்

லூக்.24:5-7; யோவா.3:16,36; 5:24; 11:25; எபி.9:14

### இவர் மகா பிரதான ஆசாரியர்

- இவர் ஜனங்களை நேரடியாக தேவனோடு இணைக்கிறார்
- இவர் குற்றமற்றவரும், பாவமில்லாதவரும், பாவத்திற்கான பூரண பலியுமானவர்; வேறெந்த பலி அல்லது ஆசாரியன் தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெற தேவையில்லாதிருக்கிறது

எபி.3:1;4:14-15; 7:24-27




### கடைசி ஆதாம்

- முந்தின ஆதாம் மனுக்குலத்தின் மேல் கொண்டுவந்த பாவம் மற்றும் மரணத்தை அழித்து இவர் மன்னிப்பையும் புதிய ஜீவனையும் கொடுக்கிறார்

ஆதி.3; ரோம.5:12-21; 1கொரி.15:21-22; 45-49

பெண்கள் பகுதி



## ஞாபகச்சின்னம்

**The Memorial** -Betty

"அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது இதுமுதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். "அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப்போனார்கள்" (மத்.26:26-30).

**முதல் நூற்றாண்டு சபையினுடைய ஞாபகச்சின்னத்தின் நியமம்**

"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும்.

"நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து" (1கொரி.15:1-4).

அனேகமாக இன்று கிறிஸ்துவின் சபைகளில் பல கிறிஸ்தவர்களுக்கு, இயேசுவின் மரணத்தை நினைவுகூருதல் மேஜையைச் சுற்றியுள்ள பல ஆண்களின் கூட்டத்தில் ஆரம்பித்து பாத்திரமானது திரும்பவும் கொடுத்தவர்களிடத்தே முடிவடைகிறது. கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருகையில் ஒருவருடைய சொந்த மனச்சாட்சியை நிதானித்து அறிந்து பங்கு பெருகிறதாயிருக்கிறது.

நினைவுகூருதல் என்பது நல்லது, நானே அதிலிருந்து ஒன்றையும் விலக்கவில்லை, ஆனால் ஆனால் ஆராதனைக்காவும், கிறிஸ்துவோடுகூடிய நெருக்கமான உறவுக்காகவும் கூடுகையில் நினைவுகூருதலுக்கென ஆயத்தமாவதில் நாம் ஒருவரையொருவர் சுட்டிக்காட்டுவது ஒரு அற்புதமான நிகழ்வில் வருத்தத்துக்குரியதாயிருக்கிறது.

இயேசு மரித்தபோது, விசுவாசிகள் அவருடைய சரீரத்தை சிலுவையிலிருந்து எடுத்தார்கள். விசுவாசிகள் அவருடைய சரீரத்தை சுகந்த வர்க்கங்களுடனே துய்யதான மெல்லிய துப்பட்டியினால் சுற்றி, அவருடைய சரீரத்தை சீலைகளில் சுற்றிக் கட்டி பின்பு விசுவாசிகள் கல்லறையில் வைத்தார்கள். அதன் பின்பு வாரத்தின் முதல்நாள் காலையில் கவலையோடு ஸ்திரீகளும் விசுவாசிகளும் சுந்தவர்கங்களையும் பரிமளதைலங்களையும் அவர் மரணத்தில் நீண்டநாள் இருப்பார் என எதிர்பார்த்து அவருடைய சரீரத்தை ஆயத்தப் பண்ணும்படி சுகந்தவர்க்கங்களையும், பரிமளதைலங்களையும் ஆயத்தம் பண்ணி கல்லறைக்குக் கொண்டுவந்தார்கள்.



இது அந்த மரணத்தின் நினைவுகூருதலில், வாரத்தின் முதல் நாள் தோறும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் நினைவுகூர்ந்தது போல நாம் அவர் தம்முடைய மரணத்தை ஜெயித்தார் எனக்கூடிவருகிறோம். "வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7).

நினைவுகூருதலில் தேவனுடைய குமாரனின் மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலில் கிறிஸ்தவர்கள் முக்கியமாக கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் மாதிரியாக வைக்கப்பட்ட புளிப்பில்லா அப்பத்திலும் பழச்சாறிலும் பங்கு கொள்ளும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட பரிசுத்த ஐக்கியத்திற்குரியதே நினைவுகூருதல் ஆகும். ஆனால் "ஆயத்தமாகுகிற" அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அதிகமாக கிறிஸ்துவின் சபைகளில் கிறிஸ்துவின் மரணத்தை நினைவு கூருகிறார்களா? மெய்யான விருந்துக்கு நிழலாயிருந்த பஸ்கா அப்பத்தைப் போல புதிதான அப்பத்தை அன்புடனும், பயத்துடனும் விசுவாசிகளின் கைகளினால் தயாரிக்கப்படுகிறதா? இல்லை, கவலைக்குரியது, அதிகமான பிராந்திய சபைகளில் புதியதல்லாத உடைந்து போகக்கூடியதை இந்த தியாக நினைவுகூருதலுக்குப் பயன்படுத்துகின்றனர். யூதகுலத்தவர்களால் தயாரிக்கப்பட்ட அப்பமானது "பஸ்காவுக்காக அல்ல" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் அற்பமானதை மிகைப்படுத்துவதாக நீங்கள் நினைக்கிறீர்களா? இருக்கலாம். அப்படி இருந்தபோதிலும் இது அற்பமான காரியமல்ல. கர்த்தர் ஆராதனையில் செய்யக்கூடியதாயிருந்த மிகச் சிறிய காரியங்களை பற்றிக்கூட மிகவும் கண்டிப்புள்ளவராயிருந்தார். யாத்திராகமம்34:25 பஸ்காவிற்குரிய அப்பத்தைக் குறித்து அவர் "எனக்கு இடும் பலியின் இரத்தத்தைப் புளித்தமாவுடன் செலுத்த வேண்டாம்; .." அவர் இன்னும் உபாகமம்16:4-லும்: "ஏழுநாள் அளவும் உன் எல்லைகளிலெங்கும் புளிப்புள்ள அப்பம் உன்னிடத்தில் காணப்படலாகாது..." அவர் கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் கண்டிப்பினை குறைத்து இருந்தாலும்கூட, வழக்கமான மனநிலையைக் காட்டிலும் தேவனுடைய குமாரனின் நினைவுகூருதலைப் பயத்தோடும், நிதானத்தோடும் கைக்கொள்வது நியாயமானதில்லை என நினைக்கிறீர்களா?

மேலும் தேவன் நமது கவனக்குறைவை அறிந்திருந்தாலும் கூட, எப்படியோ இதை வெளிப்படுத்தாமல் இருந்துகொண்டு கிறிஸ்துவுக்காக மனக்கிளர்ச்சியின்றி அக்கறையற்றவர்களாக கிறிஸ்தவர்கள் பின்பகுதியில் உட்கார்ந்து கொண்டு இருக்கையில் அவிசுவாசிகளை நம்முடைய நினைவுகூருதலுக்கு மிக இன்றியமையாததாக கிரியைசெய்ய அநுமதிக்கிறோம்.

மரியாள், யோவான்னாள் மற்றும் மகதலேனாமரியாள் தங்களுடைய கர்த்தரை சிலுவையில் அறைந்து, புறக்கணித்த மக்களால் செய்யப்பட்ட அப்பத்தை ஆராதனை செய்யும்படி வாங்குவதற்கு மார்க்கெட்டுக்குச் சென்றார்கள் என கற்பனை செய்கிறீர்களா?

இல்லை, பதிலாக, நான் பார்க்கிறேன் அவர்களுக்குள் திட்டமிட்டு ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய நாளில் மிகச்சிறந்த மாவினையும் எண்ணெயையும் எடுத்து, மிகச் சிறந்த பழத்தினை எடுத்து மிக அழகாக நினைவுகூருதலுக்கென்று ஆர்வத்துடன் தங்களது சிறப்புரிமையென எண்ணி ஆயத்தம்செய்ய முன் வந்திருப்பார்கள் சந்தேகமின்றி, அனைத்து நேரங்களிலும் அவள் ஆராதனைக்கென்று மிக அவசியமான அடையாளங்களாகிய அப்பம் தயாரிக்க தேவையான பொருட்களை ஆயத்தம் பண்ணுவதிலும், அவள் திருவிருந்தில் நினைவுகூர்ந்தவளாக மிகுந்த அன்புடன் அதையே நினைத்திருந்திருப்பாள்.